**O.S.No.17/2012**

**Date:09.10.2018**

**வாதி தரப்பு சாட்சி 2 – குற்றாலம், த-பெ.கருப்பணன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் விவசாய வேலை பார்க்கிறேன். அத்துடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. தாவாச் சொத்து 1ம் பிரதிவாதியின் அப்பாவுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் பூர்வீக பாத்தியம் என்று சொல்லியுள்ள நிலையில், எந்தெந்த சர்வே எண்கள் பூர்வீக பாத்தியம் என்றால் நர்ன பேசி முடித்தது சர்வே எண்.352-14சி மட்டும்தான் தெரியும், மீதி சர்வே எண்கள் தெரியாது. வாய்க்கிரால் பாகத்திற்கு எழுத்துபூர்வமாக எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு எந்த தேதியில் எவ்வளவு முன் பணம் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்தநிருபண வாக்குமூலம் யார் தயார் செய்தது என்றால் நான்தான் சொல்லி, தயார் செய்யப்பட்டது. தாவாச் சொத்து அப்துல் முத்தலிபுக்குத் தனித்துப் பாத்தியம் என்றால் அவரது மகளிடம் கையெழுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகளின் குடும்பம் பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். 15.03.2001ல் 3 மற்றும் 1ம் பிரதிவாதிகளுக்கு இடையே வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு பற்றி தெரியுமா என்றா்ல தெரியாது. தாவாச் சொத்தை எந்த தேதியில், யார் மூலமாக அளந்தார்கள் என்ற விபரத்தை என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து எத்தனை சர்வே எண் என்று தெரியுமா ன்றால் ஒரு சர்வே எண்தான் எனக்குத் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வாதிகேட்டுக் கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தை மோசடியாக கிரயம் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.